| |
|---|
| **மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் , இராதாபுரம்.**<br>**முன்னிலை - திரு. V.C. குபேரசுந்தர், M.A., B.L.,**<br>**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், இராதாபுரம்.**<br>**2026 ம் ஆண்டு ஜீன் திங்கள் 12 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**<br>**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 39/2024**<br>**CNR No. TNTL 260078722024** |

| | |
|---|---|
| தமிழக அரசு<br>காவல் உதவிஆய்வாளர் மூலம்,<br>இராதாபுரம் காவல் நிலையம்,<br>குற்ற எண்.14/2023. | **... குற்றமுறையிட்டாளர்** |
| /எதிர் | |
| தூசிமுத்து, வயது 50/2023,<br>த/பெ. சாமி தேவர்,<br>3/136 E, மேற்குதெரு,<br>தனக்கர்குளம். | **.... குற்றஞ்சாட்டப்பட்டவர்** |

இவ்வழக்கானது 21/11/2024-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வந்து இறுதி விசாரணைக்காக இந்நீதிமன்றம் முன்பு 09/06/2026-ம் தேதி வந்த போது அரசுக்காக அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை1 அவர்களும், குற்றஞ்சாட்டப்பட்டவருக்காக வழக்கறிஞர் திரு.G.A. பாரதி, M.A., B.L., அவர்களும் ஆஜராகி, இருதரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, இதுநாள் வரை இந்நீதிமன்றம் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

## வழக்கின் விபரங்கள்

| வ. எண் | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | இராதாபுரம் காவல் நிலையம் குற்றஎண். 14/2023 | |
|---|---|---|---|
| 1 | குற்றம் சாட்டப்பட்டவரின் விபரம் | பெயர் | தூசிமுத்து |
| | | தந்தை பெயர் | சாமி தேவர் |
| | | தொழில் | கூலி |
| | | குடியிருப்பு | தனக்கர்குளம் |
| | | வயது | 50/2023 |
| 2 | சம்பவ தேதி | | 24/01/2023 |
| 3 | முறையீடு/குற்ற இறுதி அறிக்கை | | 21/11/2024 |
| 4 | கைது | | 20/02/2023 |
| 5 | பிணையில் விடுவித்தல் | | 20/02/2023 |
| 6 | ஒப்படைத்தல்/அனுப்பிவைத்தல்/குற்றச்சாற்று | | 19/01/2026 |
| 7 | விசாரணைத் துவக்கம்<br>அ.சா.1 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை | | 08/06/2026 & 08/06/2026 |
| | அ.சா.2 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை | | 08/06/2026 & 08/06/2026 |
| 8 | கு.வி.மு.ச. பிரிவு 313 ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட தேதி | | 09/06/2026 |
| 9 | விசாரணை முடிவு | | 09/06/2026 |
| 10 | தண்டனை அல்லது உத்தரவு | | 12/06/2026 |
| 11 | தீர்ப்புரை நகலை வழங்குதல் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் மீதான காண்முடிவு /முடிவு | | 12/06/2026 |
| 12 | காலதாமதத்தின் விளக்கம் | | குற்றஞ்சாட்டப்பட்டவர் மற்றும் சாட்சிகளுக்கு சம்மன் |

| | | |
|---|---|---|
| | | அனுப்புவதில் காலதாமதம் ஏற்படுத்துள்ளது. |

1) **குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:**

சாட்சி1 கனகா பிளாரன்ஸ் என்பவர் சிவசுப்பிரமணியபுரம் E.E. 420 சிவசுப்பிரமணியபுரம் PACCS தனக்கர்குளம் நியாவிலைக் கடை விற்பனையாளராக பணிபுரிந்து வருவதாகவும், எதிரி தனக்கர்குளம் மேற்கு தெருவில் குடியிருந்து வருவதாகவும், சாட்சி 1 தனக்கர்குளம் ரேன் கடையில் செவ்வாய்கிழமையும், பெத்தரெங்கபுரம் ரேசன் கடையில் புதன்கிழமையும், அழகேனரி ரேசன் கடையில் வியாழக்கிழமையும், பிள்ளையார்குடியிருப்பு ரேசன் கடையில் சனிக்கிழமையும் பொருட்கள் விநியோகம் செய்து வருவதாகவும், இந்நிலையில் 24.01.2023 ல் தேதி செவ்வாய் கிழமை 27 IP 039 PY - என்ற எண் கொண்ட தனக்கர்குளம் ரேசன் கடையில் சாட்சி 1 காலை முதல் மண்ணெண்ணெய் மற்றும் அனைந்து பொருட்களும் விநியோகம் செய்து கொண்டிருந்த போது மாலை 4.30 மணியளவில் மண்னென்ணெய் இருப்பு முடிந்த நிலையில் மற்ற இதர பொருட்கள் விநியோகம் செய்து கொண்டி போது எதிரி சாட்சி -1டம் வந்து தனக்கு மண்ணெண்ணெய் வேண்டும் என்று கேட்ட போது சாட்சி1 எதிரியிடம் மண்ணென்ணெய் தீர்ந்து விட்டது என்றும் மற்ற பொருட்களை வேண்டுமென்றால் வாங்கி கொள்ளுங்கள் என்றும் இனிமேல் மண்ணெண்ணெய் வந்த பிறகு வாங்கி கொள்ளுங்கள் என்று கூறியுள்ளதாகவும், அதற்கு எதிரி சாட்சி1ஐ பார்த்து நான் கேட்டால் எனக்கு மண்ணெண்ணெய் இல்லை என்று சொல்லுவியா தேவடியாமவளே என்று அசிங்கமாக பேசிக் கொண்டு ஆத்திரத்தில் சாட்சி -1ன் அருகில் வந்து ரேசன் கடையில் சாட்சி -1 க்கு அரசால் வழங்கப்பட்ட கைரேகை பதிவு செய்யும் பகுதி இயந்திரத்தை (Mantra version 4.0/2022) சாட்சி -1ன் கையில் இருந்து பிடுங்கி கவரில் எரிந்த போது அந்த கைரேகை இயந்திரமானது சேதமடையாததால் இதுவரையிலும் சாட்சி -1, அந்த கைரேகை பகுதி இயந்திரத்தை வைத்து பயன்படுத்தி வருவதாகவும்,

மேலும் எதிரி, சாட்சி -1 அரசு பணியை செய்யவிடாமல் பிரச்சனை செய்து கொண்டிருந்த போது சாட்சி -1 எதிரியிடம் மறுபடியும் மண்ணெண்ணெய் முடிந்து விட்டது இனிமேல் மண்ணெண்ணை சரக்கு வந்த பிறகு வாங்கி கொள்ளுங்கள் எனக் கூறியபோது எதிரி சாட்சி -1 ஐ அசிங்மாக பேசி, அரசு பணியை செய்யவிடாமல் தடுத்தும், ஒரு பெண் என்றும் பாராமல் பெண்மைக்கு களங்கம் ஏற்படுத்திய குற்றத்திற்காக குற்றத்திற்காக இராதாபுரம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 294(பி),353,354 படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) **<u>எதிரிக்கு கு.வி.மு. ச. பிரிவு 207 ன் படி நகல் வழங்குதல்</u>** :

இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி, எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானவுடன், குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வழங்க வேண்டிய அரசுத் தரப்பு ஆவணங்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207-ன் படி வழங்கப்பட்டது.

3) **<u>குற்றச்சாட்டு வனைதல்</u>** :

எதிரிக்கு வழக்கு நகல்கள் இலவசமாக வழங்கப்பட்ட பிறகு போதிய கால அவகாசம் வழங்கிய பின்னர் வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்து எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 294(பி),353,354 படி குற்றச்சாட்டு வனைந்து விளக்கிக் கூறி வினாவியபோது குற்றஞ்சாட்டப்பட்டவர் தான் குற்றவாளியில்லை என்று குற்றச்சாட்டை மறுத்துக் கூறினார். எனவே அரசு தரப்பு சாட்சியத்திற்கு உத்தரவிடப்பட்டது.

4) **<u>அரசு தரப்பு சாட்சிகளில் இருந்து தெரிய வரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்</u>**:

அ.சா.2 சகாதேவன் தனது சாட்சியத்தில் நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 25.01.2023 ம் தேதி 11.30 மணிக்கு இராதாபுரம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் வள்ளிநாயகம் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது சிவசுப்பிரமணியபுரம், தனக்கர்குளம் நியாய

விலைக்கடையைச் சேர்ந்த நியாய விலைக் கடை விற்பனையாளர் கனகா பிளாரன்ஸ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனு (அ.சா.ஆ.2) பெற்று, பின்னர் புகார் மனுவின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 14/2023 இ.த.ச. பிரிவுகள் 294(b), 353, 354, of IPC and 3 of TNPPDL act சட்டத்தின் கீழ் முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ.3) பதிவு செய்த வழக்கை, விசாரணை அதிகாரி விசாரணைக்கு எடுத்து கொண்டு 25.01.2023 ம் தேதி 12.30 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஆசீர்வாதம், விக்டர்ராஜன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் (அ.சா.ஆ.4), மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.5) தயார் செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரியை தொடர்ந்து தேடி வந்த நிலையில் எதிரி அனைவரும் திருநெல்வேலி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்று பிணையில் சென்று விட்டார். பின்னர் சாட்சிகள் 1 முதல் 7 மற்றும் வழக்கு பதிவு செய்த பதிவு செய்த உதவி ஆய்வாளர் வள்ளிநாயகம் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கின் விசாரணை அதிகாரி 20.11.2023 ஆம் தேதி வழக்கின் சட்டப்பிரிவை 294(b), 353, 354, of IPC and 3 of TNPPDL act யிலிருந்து 294(b), 353, 354, of IPC ஆக வழக்கு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கின் விசாரணை அதிகாரி வழக்கின் எதிரி மீதான குற்றம் உண்மை என தெரிய வந்ததால் 294(b), 353, 354 of IPC ஆக குற்ற இறுதி அறிக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

5)**<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** :

இவ்வழக்கில் அ.சா.1 புகார்தாரர் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், ஏனைய சாட்சிய விசாரிப்பதில் நீதிமன்ற நேரம் விரையமும், மேலும் ஏனைய சாட்சிகள் விசாரிப்பதினால் வழக்கில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படபோவதில்லை என்பதால் அரசு தரப்பில் பட்டியலிடப்பட்ட 11 சாட்சிகளில் 9

சாட்சிகளை அரசு தரப்பு விலக்கிக் கொண்டு விசாரணை அதிகாரி அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) **குவி.மு.ச. பிரிவு 313(1) (ஆ) படியான கேள்வி வினவுதல்**:

இவ்வழக்கில் அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியம் முடிவுற்ற பிறகு மேற்கண்ட சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான விபரங்கள் குறித்து எதிரிக்கு கு.வி.மு.ச. பிரிவு 313(1) (ஆ) படி எடுத்துக் கூறி வினவியபோது எதிரி பொய் சாட்சியம் என மறுத்துள்ளதுடன் தனது தரப்பில் சாட்சிகள் எதுவும் இல்லை என தெரிவிக்கப்பட்டு சாட்சியங்கள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை.

7) **அரசு தரப்பு வாதம்**:

அரசு தரப்பில் அ.சா. 1,2 சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.2 புலன் விசாரணை சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியமளித்துள்ளார். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 ஆவணங்களின் மூலம் அரசு தரப்பில் மேற்படி குற்றச்சாட்டுக்களை எதிரிக்கு எதிராக நிரூபித்துள்ளது என்றும் எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்கும் படி வாதிடப்பட்டது.

8) **எதிரி தரப்பு வாதம்**:

எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் அ.சா.1 ன் சாட்சியம் அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ள நிலையில் எதிரி மீதான குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை. அதனால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி விடுதலை செய்யும் படி வாதிடப்பட்டது.

9) **குற்றச்சாட்டு மீதான விவாதம்** :

எதிரி மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்?

10) **<u>தீர்வு</u>:**

(i) அ.சா.1ன் சாட்சியத்தை ஆராய்கையில் எதிரி அ.சா.1 ஐ பார்த்து அசிங்கமாக ஏசியதாகவோ, எதிரி அ.சா.1 ஐ அரசு பணியை செய்யவிடாமல் தடுத்ததாகவோ, எதிரி அ.சா.1ன் பெண்மைக்கு குந்தகம் ஏற்படுத்தியதாகவோ சாட்சியங்கள் எதுவும் அமையவில்லை. அதாவது அ.சா.1ன் சாட்சியத்தை இந்நீதிமன்றம் பரிசிலினை செய்ததில்,

> *"நான் தற்போது பத்திநாதபுரத்தில் வசித்து வருகிறேன். கூட்டுறவு சொசைட்டியில் இளநிலை எழுத்தராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் புகார் மனுவில் கையொப்பம் செய்தேன். புகார் மனுவில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை"* என்று சாட்சியம் அளித்துள்ளார்.

எனவே அ.சா.1 முதல் விசாரணையில் அரசு தரப்பு வழக்கை உறுதியூட்டி சாட்சியம் அளிக்கவில்லை.

(ii) எனவே அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்குவிசாரணை செய்யப்பட்டும் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை மெய்ப்பிக்கும் பொருண்மை எதுவும் அமையவில்லை. எனவே இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

(iii) இந்நிலையில்,

**1972 (4) SCC 562 SAIT TARAJEE KHIMCHAN AND OTHERS Vs**

**YELAMARTI SATYAM ALIAS SATTEYYA AND OTHERS** இவ்வழக்கில் பாரா நம்பர் 15 ல் கீழ்க்கண்டவாறு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

> ***The mere marking of an exhibit does not dispense with the proof of***

என்று தீர்ப்பளித்துள்ளது.

(iv) மேலும் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தினுடைய 2 நீதிபதிகள் கொண்ட அமர்வு வழங்கிய தீர்ப்பான **2003 (8) SCC Page No. 245, NARBADA DEVI GUPTA Vs BIRENDRA KUMAR JAISWAL AND ANOTHER** பாரா நம்பர் 16 ;

> ***"The legal position is not in dispute that mere production and marking of a document as exhibit by the court cannot be held, to be a due proof of its contents"***

என்று கூறுகிறது. அதாவது, மேற்படி உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகளின்படி ஒரு ஆவணத்தை நீதிமன்றத்தில் சான்றாவணமாக குறியீடு செய்யப்பட்ட காரணத்தினால் மட்டுமே அந்த ஆவணத்தின் உள்ளடக்கம் நிரூபிக்கப்பட்டுள்ளதாக எடுத்துக் கொள்ள முடியாது.

11) **முடிவு** :

(i) இந்நிலையில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 பிறழ்சாட்சியாக மாறிவிட்ட காரணத்தினால் அ.சா.1 ன் சாட்சியமானது ஏற்றுக்கொள்ளும் வகையில் உள்ளதா என்பதை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்ளும் போது, இந்நீதிமன்றமானது, மாண்புமிகு உச்ச நீதிமன்றம் கொடுத்த முன் தீர்ப்பான ***Vadivelu Thevar vs State of TN AIR 1957 SC 614 wherein held that***

> it is a sound and well – established rule of law that the court is concerned with the quality and not with the quantity of the evidence

necessary for, proving or disproving a fact. Generally speaking, oral testimony in this context may be classified into three categories, namely :
(1) Wholly reliable
(2) Wholly unreliable
(3) Neither wholly reliable nor wholly unreliable

*In case on hand falls the second category of proof, when the PW1 evidence is wholly unreliable it does not require corroboration.*

(ii) மேற்கண்ட முன் தீர்ப்பை இவ்வழக்கிற்கு பொருத்தி பார்க்கும்போது பொருந்துவதாக இந்நீதிமன்றம் கருகிறது. மேற்கண்ட முன் தீர்ப்பின் படி அ.சா.1ன் சாட்சியமே நம்பகத்தகுந்ததாகவே இல்லாத போது மற்ற அரசு தரப்பு சாட்சியங்களின் உறுதியூட்டலை ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

12) **இறுதியாக**, அரசு தரப்பில் எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து இவ்வழக்கின் எதிரியை இ.த.ச. பிரிவுகள் 249(பி),353,354-ன் படி குற்றவாளி இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் படி எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

13) **வழக்கு சொத்து மீதான உத்தரவு :**

வழக்கு சொத்துக்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே வழக்கு சொத்துக்கள் சம்பந்தமாக உத்தரவு இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு,

2026-ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 12-ஆம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

V C KUBERRASUNDAR Digitally signed by V C KUBERRASUNDAR Date: 2026.06.12 17:18:07 +0530

மாவட்ட உரிமையியல் (ம)

நீதித்துறை நடுவர்,

இராதாபுரம்.

**அரசு தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| அ.சா.1 | கனகாபிளாரன்ஸ், க/பெ. ஆசீர்வாதம் |
| அ.சா.2 | சகாதேவன், த/பெ. குட்டிகண் (சிறப்பு உதவி ஆய்வாளர்) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | 25/01/2023 ம் தேதியிட்ட புகார் மனுவில் அ.சா.1 ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.2 | 25/01/2023 ம் தேதியிட்ட புகார் மனு |
| அ.சா.ஆ.3 | 25/01/2023 ம் தேதியிட்ட முதல்தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 25/01/2023 ம் தேதியில் பதிவு செய்த பார்வை மகசர் |
| அ.சா.ஆ.5 | 25/01/2023 ம் தேதியில் பதிவு செய்த மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

**அரசு தரப்பு சான்றுபொருட்கள்** - இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள்**-இல்லை

V C KUBERRASUNDAR Digitally signed by V C KUBERRASUNDAR Date: 2026.06.12 17:18:12 +0530

மாவட்ட உரிமையியல் (ம)

நீதித்துறை நடுவர், இராதாபுரம்.

**குறிப்பு**

| | |
|---|---|
| 1. | வழக்கின் முடிவு பற்றி காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது. |
| 2. | வழக்கு விசாரணையின் போது  எதிரி  பிணையில் இருந்தார். |
| 3. | எந்த ஒரு சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை. |